**ஜுன் – 18**

**"உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு." - சங் 16 : 11.**

கர்த்தருடைய சமூகத்தில், நாம் எங்கிருந்தாலும் சரி, பரிபூரண ஆனந்தமுண்டு. ஜெபத்திலும் அவருடைய மதிப்புமிக்க வார்த்தையைக் கவனமாய்ப் படிப்பதிலும், அவருடைய எல்லாக் காருண்ய செயல்கள் பேரிலும், அவருடைய பராமரிப்புள்ள கவனத்தின் பேரிலும், நம்முடைய சொந்த அனுபவங்களிலுள்ள அவருடைய கிருபையின் தெளிவான வெளிப்படுத்துதல்கள் பேரிலும், யேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும் அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிற அவருடைய மதிப்புமிக்க வாக்குத்தத்தங்கள் பேரில் தியானமாயிருப்பதிலும், அவரிடம் கிட்டிச்சேர்ந்து நாம் கர்த்தரோடு கொண்டுள்ள பழக்கத்தை அதிகமாக விருத்தி செய்வோமாக. இவ்விதமாக "தேவனிடத்தில் சேருங்கள் அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்" (யாக் 4:8) அவர் தம்மை உங்களுக்கு வெளிப்படுத்தி உங்களோடு வாசம் பண்ணுவார். அவருடைய எல்லா பிள்ளைகளும், அவரில் சந்தோஷமாய் இருக்க வேண்டும் என்பதும், அவர்கள் எப்பொழுதும் களிகூரவேண்டும் என்பதும், உண்மையாகவே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. யாராவது ஒருவருக்கு இந்தப் பாக்கியத்தில் குறை உண்டானால், அப்படிப்பட்டவர் தனது சிலாக்கியங்களுக்குக் கீழாகவே ஜீவித்துக் கொண்டிருக்கிறார். **- Z ’96, 54 (R 1948).**

தேவனுடைய சமூகம் நம்முடைய தற்கால தியாகஞ்செய்கிற நிலையிலும், நம்முடைய வருங்கால மகிமைப்படுத்தப்பட்ட நிலையிலும் இருக்கிற தேவனுடைய தயவின் நிலைமையைக் குறிக்கிறதாக நாம் அறிந்து கொள்ளலாம். பரிபூரண ஆனந்தம், அதாவது ஒருவர் தன்னுடைய பூரணமாகக் கிரகிக்கும் சக்திக்குள்ள சந்தோஷமே இரண்டு நிலைமைகளின் சிலாக்கியமாயிருக்கிறது. அவருடைய மிகவும் நிறைவான தயவை அனுபவிக்கிற கிறிஸ்து வகுப்பார், நித்திய பேரின்பத்தால் ஆசிர்வதிக்கப்படுகிறார்கள்.

**-P ’36, 78.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

அப் 2:28; நீதி 4:18; 1யோவா 3:2; மத் 5:8; சங் 17:15; 36:8; எபி 12:2; லூக் 14:14; யோவா 6:39,40,44,54; 14:2,3,19; அப் 2:26-28; 26:6,7; 1கொரி 15:40-57; 2கொரி 5:1-5; பிலி 3:10,11,21; வெளி 20:4,6.

**கோபுர வாசிப்பு : Z ’,96 53 (R 1949)**

**வினாக்கள் :** இந்த வசனம் இவ்வாரத்தில் எனக்கு என்ன அர்த்தமுள்ளதாயிருந்தது? எனது அன்றாட ஜீவியத்தில் அதை நான் எவ்விதம் பயன்படுத்தினேன்? பலன்கள் எவை?